# தேசியக் கருத்தரங்கம்

## இக்காலத்தமிழரும் பாரதிதாசன் படைப்புகளும்

**20.12.2016& 21.12.2016**

உலக இன வரலாற்றில் தமிழின மக்கள் நிலைத்திருக்கத் தமிழரின் நிலையைத் தமிழில் புரட்சி உணர்வுடன், பா இயற்றியவர் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன். பாரதிதாசன் பெயரின் அறக்கட்டளைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் 20.12.2016 -21.12.2016 ஆகிய இருநாள்கள் தேசியக் கருத்தரங்கம் என நிகழ்ந்தது. கருத்தரங்க நிகழ்வினை அறிமுகப்படுத்தி வரவேற்புரையைத் தமிழ்த்துறைத்தலைவர் பேரா.மு.பாண்டி அவர்கள் நிகழ்த்தினார்.

பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேரா.சொ.சுப்பையா அவர்கள் தலைமையுரையாற்றினார். துணைவேந்தரின் தலைமையுரை, பாரதிதாசனின் படைப்புகள் மேனாட்டுக் கவிஞர்களில் சேக்ஷ்பியர்,ஷெல்லி, வேர்ட்ஸ்வொர்த் போன்றோர் இலக்கியப் படைப்பிற்கு இணையானது. பாரதிதாசன் காலத் தமிழரிடம் அகவை முதிர்ந்த மூத்தோனுக்கு இளம் பருவப் பெண்ணை மணம் செய்து கொடுத்து அப்பெண் கைம்மையிலும், இளம்பருவ இன்பத்தையும் துறந்து வாழ்கின்றப் பொருந்தா மணக்கொடுமையும், மூளைவளர்ச்சியும் உடல் வளர்ச்சியும் இல்லாப் பருவச் சிறார்களுக்கு மணம் செய்து வைத்தல் என்ற பொருளற்ற வாழ்க்கை முறையில் பெண்கள் வாழ்வின் மகிழ்வே உணராது சாக்காட்டிலும் துன்பத்திலும் உழன்று வாழ்கின்ற சமூகக் கொடுமைகளை மக்கள் உணர எளிய நடையில் பா இயற்றியவர் பாரதிதாசன். இப்பாரதிதாசன் பாவின் திறத்தால் தமிழ்நாட்டில் பொருந்தா மணம், குழந்தைமணக் கொடுமைகள் நீங்கின. கணவன் இறந்தால் இளம் பெண்ணின் கைம்மைத்துயரமும் பொருந்தாக் கொள்கையைக் கொண்டக் கணவனை விலக்கி அன்புச் செலுத்தும் ஆண்மகனை, மணந்து வாழும் வாழ்வைப் பெண்கள் பெற்றனர் என்றால் அதற்குப் பாரதிதாசன் போன்றவர்களால்தான்” என்று உரையாற்றினார்.

.

கருத்தரங்கச் சிறப்புரையை முனைவர்.கா.மு.சேகர் இயக்குநர் உலகத்தமிழ்ச்சங்கம், மதுரை அவர்கள் ஆற்றினார். முனைவர்.கா.மு.சேகரின் சிறப்புரையில் பாரதிதாசன் படைப்புகளால் குழந்தை மணமுறைத் தமிழரிடம் அறவே நீங்கியது ஒன்றாகும். மெய்யறிவைத்தேடித் திரிந்தச் சங்கரர் ஆற்றில் நீராடியபோது ஒருநாள் ஆற்றுநீரால் அடித்துச் செல்லப்பட்டார். அடித்துச்செல்லப்படும் சங்கரரை ஆற்றின் கரையோரத்தில் ஆடு மேய்த்த ஆதி என்பவன் நீரில் குதித்துச் சங்கரரை மீட்டுக் கரைச் சேர்த்தான். கரைச் சேர்க்கப்பட்ட சங்கரர் மறுபடியும் நீரில் மூழ்கினார். சங்கரரை ஆதிகேட்டான், “ஏன் மறுபடியும் நீரில மூழ்கினாய்” என்று வினாவினார். அதற்குச் சங்கரர், ஆதியைப் பார்த்து “என்னைத் தொட்டு நீ தூக்கியதால் உன்தீட்டு என்னை ஒட்டிக்கொண்டது. அதனால் நீரில் மூழ்குகிறேன்”. என்றார். உன்னைத் தொட்டுத் தூக்கிய என்னைத் தீட்டானவன் என்று கூறும் நீ மனிதனை என்னை மதிக்காத நீ இறைவனைத் தேடி நீ என்ன செய்வாய்” என்று கூறி ஆதி

மறைந்தான். இத்தகு தீண்டாமையை வாழ்க்கையில் தூக்கிப்பிடித்தப் பிராமணர்களின் பிடியிலிருந்து தமிழர்களை மீட்டுச் சாதி உணர்வு அறவே நீங்கப் போராடியவர் பாரதிதாசன். ஏழை, தொழிலாளி, முதலியோர் பிறரால் சுரண்டப்படுவதைக் கடிந்து எல்லாரும் எல்லாம் பெற உணர்வுக் கொண்டும் அந்த உணர்வில் மக்களை உணரவைத்தவர் பாரதிதாசன்.

தமிழகத்தின் தெருக்களில் தமிழ்ப்பெயர்கள், தமிழ்பயிற்று மொழி எனும் நிலைகள் எய்தியது எல்லாம் பாவேந்தர் பாரதிதாசன் காலத்தமிழர்களுக்கு விதைத்தவிதை” என்று அவரின் உரை நிகழ்ந்தது.

21.12.2016 கருத்தரங்க நிறைவு நாளின் தலைமையைப் பல்கலைக்கழகப் பதிவாளர் பேரா.வி.பாலச்சந்திரன் அவர்கள் ஏற்றுத் தலைமையுரையாற்றிப் பேராளர்களுக்குச் சான்றிதழ்களை வழங்கினார்.

கருத்தரங்க நிறைவுரையின் சொற்பொழிவு முனைவர்.இரா.விமலன் தமிழாசிரியர் சிங்கப்பூர் அமைச்சு அவர்கள் நிகழ்த்தினார். முனைவர் இரா.விமலன் அவர்களின் உரையில் கடல் கடந்த நாடுகளில் என்னைப் போன்றத் தமிழர்களுக்குப் பணியும் மதிப்பும் கிடைப்பது என்றால் தாய்த்தமிழ், நாட்டிலிருந்து உள்நாட்டுத் தமிழர்களின் விடுதலைக்கும், வெளிநாட்டுத் தமிழர்களின் விடுதலைக்கும் பாடுபட்ட பாவேந்தர் போன்றப் போராட்டப் பண்புள்ளவர்களால் நிகழ்ந்தது” என்று உரைநிகழ்த்தினார்.

தேசியக் கருத்தரங்கப் பேராளர்களின் கட்டுரைகள் பாரதிதாசன் பாடல்களில் இக்காலத் தமிழர் வாழ்வுக்கும் வளத்திற்கும் சிறப்பளிப்பனப்பற்றியக் கருத்துக் கட்டுரைகளைச் செம்மைப்படுத்தி நூலாக்கம் செய்யப்பட்டுள்ளன.

பாரதிதாசனைப் பற்றியத் தேசியக் கருத்தரங்கின் செயல்நிகழ்ச்சிக்குத் தமிழ்த் துறைத்தலைவர் மு.பாண்டி மற்றும் பேராசிரியர்கள், ஆராய்ச்சி மாணவர்கள், முதுகலை முதலாமாண்டு, இரண்டாமாண்டு மாணவர்களின் ஒத்துழைப்புடன் கருத்தரங்க அமர்வுகளில் வினாநேரம் ஒதுக்கப்பட்டுக் கருத்தரங்கின் முதன்மைப் பொருள் வெளிப்படுமாறு அமைந்திருந்தது.

நிகழ்ச்சியின் நிறைவுவிழாவில் கருத்தரங்கப் பொறுப்பாளர் தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் திரு.மு.நடேசன் நன்றி உரையாற்றினார்.



## ஆ.சந்திரபோஸ் படைப்புகள் பன்முகப்பார்வை 14.02.2017

சாகித்திய அகாதெமியும் அழகப்பா பல்கலைக்கழகத் தமிழ்த்துறையும் இணைந்து மேலக்கோணம்பட்டி மானுடம் பாடிய வானம்பாடி ஆ.சந்திரபோஸ் படைப்புகள் பன்முகப்பார்வை என்ற பொருண்மையில் 14.02.2017 அன்று ஒரு நாள் கருத்தரங்கம் நடைபெற்றது.

## ஊடகங்களில் வேலைவாய்ப்பு – பயிற்சி கருத்தரங்கம் 30.01.2017 மற்றும் 31.01.2017

அழகப்பா பல்கலைக்கழகத் தமிழ்த்துறையும் தொழில் ஒருங்கிணைப்பு மையமும் இணைந்து நடத்தும் ‘ஊடகங்களில் வேலை வாய்ப்பு – பயிற்சிக் கருத்தரங்கம் 30.01.2017 திங்கள் கிழமை காலை’ அன்று நிகழ்த்தப்பட்டது.

அழகப்பா பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேரா.முனைவர் .சொ.சுப்பையா அவர்கள் கலந்துகொண்டு தலைமையுரை நல்கினார்.

நிகழ்வில் மதுரையின் மூத்த அறிவிப்பாளர் எஸ்.ஞானசம்பந்தன் (எ) பூரணகுமார் அவர்கள் ‘வானொலியில் வேலை வாய்ப்பு’ என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார். அன்று மாலை 2.30 மணியளவில் திண்டுக்கல் காந்தி கிராமகிராமியப் பல்கலைக்கழகத்தின் உதவிப்பேராசிரியர் முனைவர் சி.சிதம்பரம் அவர்கள் ‘இணையத்தில் வேலை வாய்ப்பு’ என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார்.

31.01.2017 அன்று காலை இரண்டாம் நாள் நிகழ்வில் மதுரை அமெரிக்கன் கல்லூரியின் இணைப்பேராசிரியர் முனைவர் இரா.பிரபாகரன் அவர்கள் ‘திரைத்துறையில் வேலைவாய்ப்பு’ என்ற தலைப்பில் பயனுரை நிகழ்த்தினார்.

அன்று மாலை ‘கலைமாமணி, இன்னிசைவாணர் ஆர்.வாசு அவர்கள் பத்திரிகை-இதழியல் வேலைவாய்ப்பு’ என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார்கள். தொடர்ந்து பிற்பகல்

4.00 மணியளவில் நிறைவு விழா நிகழ்ந்தது. பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் வி.பாலச்சந்திரன் அவர்கள் தலைமையேற்றுச் சிறப்பித்ததுடன் மாணவர்களுக்குச் சான்றிதழும் வழங்கினார். தொடர்ந்து மாணர்வர்கள் இரண்டுநாள் கருத்தரங்களில் தாங்கள் பெற்ற அநுபவம் குறித்துப் பயனுரை வழங்கினர். இரண்டு நாள் கருத்தரங்களில் பல்துறைப்பேராசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். நிகழ்விற்குத் தமிழ்த்துறைத்தலைவர் வரவேற்புரை வழங்கியும் கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் முனைவர் மு.சுதா நன்றியுரையும் வழங்கினார்.












## உலகத் தாய்மொழி நாள் 21.02.2017

தமிழ்த்துறையின் சார்பாக உலக தாய்மொழிநாள் விழா 21.02.2017 அன்று பேரா.சொ.சுப்பையா, துணைவேந்தர் அவர்களின் தமிழ்த்துறையில் நடைபெற்றது.





பல்கலைக்கழகத் துணைவேந்தர் சுப்பையா அவர்களின் தலைமையுரையில்

உலகில் செம்மொழித்தகுதிக்குரிய மொழிகளில் தமிழ்மொழி முதன்மையான மொழி, தமிழ்மொழி பேசும் தமிழர் உலகில் பரவியுள்ளனர். திருக்குறள் போன்ற நூல்களைக் கற்றுத் தெளிந்தால் நாட்டில் குற்றம் குறைகள் நிகழாது. இத்தகு பண்புகளை உருவாக்கும் இலக்கியங்களை தமிழ்மொழி பெற்று ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட மொழியாக விளங்குன்றது.

சிறப்புரை முனைவர்.ச.நீலகண்டன்,

மொழி இருபதாம் நூற்றாண்டில தமிழ்மொழி இணையம், கணியம் போன்ற செய்தித் தொடர்புக்குரிய மொழியில் எல்லா மொழிகளைவிட தமிழ் விளங்குகிறது. 1977ல் இந்திராகாந்தி இந்திய முதன்மை அமைச்சராக ஆட்சியில் இருந்தவர். ரஷ்யாவில் ஒரு

மாநாட்டிற்கு சென்றாா். ரஷ்ய நாட்டவா் அம்மாநாட்டில் ரஷியமொழி உலக மக்களித்தை ஒன்றுபடுத்தும் தன்மையது என்று பெருமையாகப்பேசினாா் திருமதி.இந்திராகாந்தி அவா்கள் உரையாற்றுகையில், இந்தியாவில் தமிழா் மொழியில்"யாதும் ஊரே" யாவரும் கேளிா்" என்ற புறநானூற்றின் அடிகளைச் சுட்டிக்காட்டி உலக மக்களை ஒன்றிணைக்கும் மொழியாகத் தமிழ் விளங்குகிறது எனத் தமது உரையில் கூறினாா். உலகின் ஒற்றுமைக்கு மக்களை ஒன்றுபடுத்திய மொழியாகத் தமிழ் விளங்கியது.

தமிழின் சிறப்பை அறியாத கருநாடகத்தாா் ஓா் ஆண்டிழல் தமிழகத்தில் பிறந்த தேசியக் கவிஞராகத் திகழ்ந்த பாரதியாாின் உருவ ஓவியத்தை அம்மாநில மக்கள் புழங்குகின்ற கழிப்பறை அடையாளத்திற்கு தீட்டியிருந்தனா். இச்செய்தி அறிந்த தமிழ் மக்கள் பாரதியின் பெருமையைக் கூறி கன்னடருக்கு கண்டனக்குரல் எழுப்பி அம்மாநில அரசைப் பணியவைத்தனா். இத்தகைய பெருமையுடைய தேசியக்கவி பாரதியாா் சிறுஅகவையில் கல்வி கற்க தமிழினை விரும்பிப் படிக்கப் பள்ளிக்குச் சென்றாா். பள்ளிச் சென்ற பாரதியாா் தமிழ் கற்றுத்தரும் ஆசிாியரைத் தாய் என்று கூறினாா். இவ்வாறு பாரதியாரால் தமிழ் பெருமைப்படுத்தப்பட்டது.

இந்தியத் துணைக்கண்டத்தில் கேரளத்தவா் மலையாளி, மலையாள மொழியைச் செம்மொழிக்குரியதாக நடுவண் அரசிடம் வேண்டிய பொழுது பல்லாயிரம ஆண்டுகளுக்கு முன் தோன்றிய தமிழ் மொழியின் பதிற்றுப்பத்து என்னும் நூலை சான்றுகாட்டி மலையாளமொழி செம்மொழி என்னும் தகுதிக்கு உாியது என்று காரணம் கூறியிருந்தனா்.